# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
## Tamils Rehabilitation Organisation
*P O Box 4254, Knox City, Victoria 3152, Australia*
Website: www.troonline.org


## <u>தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நத்தார் வேண்டுதல்</u>
## "உளநல – சமூக நலன்புரி சேவைத் திட்டம்"

விக்ரோரிய ஈழத்தமிழ் சங்கம் நடாத்தும், 3CR (855AM) தமிழ்க்குரல் வானொலியூடாகவும், 24 மணிநேர இன்பத்தமிழ் ஒலி வானொலியூடாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வட கிழக்கில் பணியாற்றும் சமூகத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ***உளநல - சமூக நலன்புரி சேவைத் திட்டத்திற்காக*** நடைபெறும் நத்தார் வேண்டுதல் ரேடியோதொன் நிதிசேகரிப்பு நிகழ்ச்சி, எதிர்வரும் **December** மாதம் 25ம் திகதி கிறிஸ்மஸ் தினமன்று, காலை **9** மணி முதல் மாலை **6** மணி வரை, 9 மணி நேர வானொலி நிதிசேகரிப்பு நிகழ்ச்சியாக, 19 வது ஆண்டாக நடைபெற உள்ளது.

ஈழத்தில், 2009 நடுப்பகுதியில் நடந்துமுடிந்த பயங்கர யுத்த அனர்த்தங்களினால், பாதிக்கப்பட்டு, இலங்கையின் வட-கிழக்கு மாகாணத்தில் மிகமோசமாக மன அழுத்தத் தினால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படும் எங்கள் எதிர்கால சந்ததி, பெண்கள், வயோதிபர்களின் அவலத்தைப் போக்கவும், அவர்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்து, அந்த தமிழ் உறவுகளின் வளமான வாழ்வுக்கு வழிசமைக்கும் நோக்கோடு **TRO** வினால் அங்குள்ள சமூகத்தொண்டு நிறுவனங்களின் உதவி ஒத்தாசையுடன் மேற்கொள்ளப் படும் ***உளநல -சமூக நலன்புரி சேவைத் திட்டத்திற்கு***' ஆதரவாக **3CR தமிழ்க்குரல் வானொலியிலும், 24 மணிநேர இன்பத்தமிழ் ஒலி வானொலியிலும்** நடைபெறும் கிறிஸ்மஸ் ரேடியோதொனில், மெல்பேர்னின் சகோதர தமிழ் சமூகவானொலிச் சேவைகளின் பிரபல அறிவிப்பாளர்களும், இளையவர்களும் இவ் உன்னதப் பணியில் இணைந்து கொள்கின்றனர்.

25ம் திகதி காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை உள்ள வானொலி ஒலிபரப்பு நேரத்தில், உங்கள் நன்கொடைகளை வழங்கத் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி **இலக்கங்கள் <u>1300 721 399</u> அல்லது <u>(03) 9419 8377</u> அல்லது <u>(02) 9798 2994.</u>** விடுமுறையில் செல்வோர், முன்கூட்டியே நன்கொடைகளை வழங்க இருப்போர் மற்றும் வானொலி ஒலிபரப்பு நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் உங்களது நன்கொடைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தை (03) 9888 3899 இல் தொடர்பு கொண்டோ அல்லது அஞ்சல் முகவரி **T.R.O Australia, P.O.Box 4254, Knox City, Vic 3152** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**விறுவிறுப்பான இந்த 9 மணி நேரத்தில் <u>1300 721 399</u> அல்லது <u>(03) 9419 8377</u> அல்லது <u>(02) 9798 2994</u> என்ற தொலைபேசி இலக்கங்களில் உன்னதமான இந்த நாளில் தொடர்பு கொண்டு, ஈழத்திலே அன்று முதல் இன்று வரை முன்னணியில் நின்று எமது மக்களுக்கு அயராது என்றும் உதவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் "உளநல - சமூக நலன்புரி சேவை" எனும் திட்டத்திற்கு ஆதரவு கொடுக்கத் தவறாதீர்கள் !!!!**